# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## *2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 26 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2024.07.26 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

# ஆரம்ப நீதிமன்ற நடவடிக்கைமுறை (திருத்தம்)

***1979 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, ஆரம்ப நீதிமன்ற நடவடிக்கைமுறைச் சட்டத்தைத் திருத்துவதற்கான தொரு சட்டமூலம்***

*நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை :** ரூபா *12.00* **தபாற் செலவு :**ரூபா *150.00*

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

### சட்டப்பயன்பற்றிய கூற்று

***வாசகம் 2*** **:** *இவ்வாசகம், ஆரம்ப நீதிமன்ற நீதிபதி 68 ஆம் அல்லது 69 ஆம் பிரிவின்கீழ் எந்த வழக்குப் பதிவேடுகள் தொடர்பில் கட்டளை ஆக்கியுள்ளாரோ அந்த எவையேனும் வழக்குப் பதிவேடுகளை, பிணக்கிலுள்ள விடயம் திறத்தவரொருவரின் உரித்து அல்லது அக்கறை தொடர்பானதென்றும் மாவட்ட நீதிமன்றத்தினால் தீர்ப்பளிக்கப்படுவதற்குத் தோதானதென்றும் அவர் அபிப்பிராயப்படுமிடத்து, அவர் இயைபான மாவட்ட நீதிமன்றத்துக்கு அவற்றைக் கைமாற்றுவதற்கு ஏற்பாடுசெய்வதற்கு 1979 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, ஆரம்ப நீதிமன்ற நடவடிக்கைமுறைச் சட்டத்தில் 70அ மற்றும் 70ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துவதாகும்.*

**ஆரம்ப நீதிமன்ற நடவடிக்கைமுறை**
**(திருத்தம்)**

ச.வ.ஓ. 27/2024

## 1979 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, ஆரம்ப நீதிமன்ற நடவடிக்கைமுறைச் சட்டத்தைத் திருத்துவதற்கான தொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தி னால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்*

**1.** இச்சட்டம், 2024 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, ஆரம்ப நீதிமன்ற நடவடிக்கைமுறை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*1979 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்கச் சட்டத்தில் 70அ மற்றும் 70ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்*

**2.** ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 44 ஆம் இலக்க, ஆரம்ப நீதிமன்ற நடவடிக்கைமுறைச் சட்டத்தின் 70 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் இவை அச்சட்ட வாக்கத்தின் 70அ மற்றும் 70ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:-

*"வழக்குப் பதிவேடுகளை மாவட்ட நீதிமன்றத்துக்கு அனுப்பி வைத்தல்*

70அ. (1) ஆரம்ப நீதிமன்ற நீதிபதி, விடயத்துக்கேற்ப, 68 ஆம் பிரிவின்கீழ் அல்லது 69 ஆம் பிரிவின்கீழ் கட்டளையொன்றை வழங்கும் நேரத்தில்,-

(அ) 66 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியிற் குறித்துரைக்கப்பட்டவாறாகப் பிணக்குக்கான எவரேனும் திறத்தவர் விண்ணப்பமொன்றைச் செய்தால்; அல்லது

(ஆ) பிணக்கிலுள்ள விடயம் திறத்தவ ரொருவரின் உரித்து அல்லது அக்கறை ஒன்றுடன் தொடர்பான தென்றும், ஒரு மாவட்ட நீதிமன்றத்

தினால் தீர்ப்பளிக்கப்படுவது தோதானதாகவுள்ளதென்றும் ஆரம்ப நீதிமன்ற நீதிபதி அபிப்பிராயப் பட்டால்,

ஆரம்ப நீதிமன்ற நீதிபதி, பிணக்கிலுள்ள காணி எந்த மாவட்ட நீதிமன்றத்தின் நியாயா திக்கத்தினுள் அமைந்துள்ளதோ அக்காணியின் நியாயாதிக்கத்தை அல்லது அதற்கான உரிமையை அல்லது அக்கறையைக் கொண் டுள்ள அந்த மாவட்ட நீதிமன்றத்துக்கு, அக் கட்டளையின் பிரதியொன்றை வைத்திருக்கின்ற அதேவேளையில் அக்கட்டளைத்தேதியிலிருந்து ஒருமாதத்தினுள் வழக்குப் பதிவேட்டை அனுப்பிவைக்கும்படி பதிவாளரைப் பணித்தல் வேண்டும்.

(2) வழக்குப் பதிவேட்டை மாவட்ட நீதிமன் றத்துக்கு அனுப்பிவைப்பதற்கான கட்டளை யொன்று எவ்வாறிருப்பினும், ஆரம்ப நீதிமன்ற நீதிபதி, அவரினால் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையை அத்தகைய கட்டளைத்தேதியி லிருந்து ஒருமாதத்தினுள் நிறைவேற்றும்படி திறத்தவர்களைப் பணிக்கலாமென்பதுடன், மாவட்ட நீதிமன்றத்தினால் ஏதேனும் இடைக்கால அல்லது இறுதிக் கட்டளை ஆக்கப் படும்வரை நிலவும் நிலையைப் பேணுவதற்குத் திறத்தவர்களுக்கு மேலதிகக் கட்டளைகளையும் வழங்கலாம்.

(3) வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், மாவட்ட நீதிமன்றத்துக்கு வழக்குப் பதிவேட்டை அனுப்பிவைக்கும்படி ஆரம்ப நீதிமன்ற நீதிபதி எத்தேதியன்று கட்டளையொன்றை ஆக்கினாரோ அத்தேதியி

லிருந்து, அவரது ஏதேனும் கட்டளைக்கெதிராக மேன்முறையீடு அல்லது மீளாய்வு எதுவும் செய்யப்படுதலாகாது.

*மாவட்ட நீதிமன்றத்திலான வழக்கு நடவடிக்கைகள்*

70ஆ. (1) பிரிவு 70அ வின்கீழ் வழக்குப் பதிவேடொன்றைப் பெற்றதன்மேல், மாவட்ட நீதிமன்ற நீதிபதி ஒரு வழக்கிலக்கத்தைக் குறித்தொதுக்குதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய கட்டளைத்தேதியிலிருந்து ஒருமாதத்துக்குப் பிந்தாதவொரு தேதியன்று நீதிமன்றத்தின் முன்னர் தோன்றும்படி திறத்தவர்களுக்கு அறிவித்தல் வழங்குதலும் வேண்டும்.

(2) மாவட்ட நீதிமன்றம், (101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் அத்தியாயம் XLIII இன்கீழ் விடயமானது தொடுக்கப்பட்டிருந்தது என்றாற்போன்று அத்தகைய விடயத்தை மேற்கொண்டு நடாத்துதல் வேண்டுமென்பதுடன் அதன் ஏற்பாடுகள் அத்தகைய வழக்குநடவடிக்கைகள் தொடர்பாக ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(3) மாவட்ட நீதிமன்றம், திறத்தவர்களின் உரிமைக்கோரிக்கைகள் பற்றிய கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும்படி அவர்களுக்குக் கட்டளையிடுதல் வேண்டும். மாவட்ட நீதிமன்றம் அதன் சொந்தப் பிரேரணையின்மீது அல்லது அதன் முன்னருள்ள எவரேனும் திறத்தவரினாலான விண்ணப்பமொன்றின்மீது, வழக்குநடவடிக்கைகளுக்கு வேறெவரேனும் திறத்தவராகச் சேர்ப்பது நீதி நலன்களுக்காக அல்லது நீதிமன்ற நடைமுறையின் துர்ப்பிரயோகத்தைத் தடுப்பதற்கு அவசியமாகக்கூடுமென நீதிமன்றம் அபிப்பிராயப்படின், அவ்வாறு சேர்க்கலாம்.

(4) மாவட்ட நீதிமன்றம், ஒரு திறத்தவரின் விண்ணப்பமொன்றின்மீது அல்லது அதன் சொந்தப் பிரேரணையின் மீது மற்றும் நீதிமன்றம் திருப்திப்படின், இறுதித்தீர்ப்பு அளிக்கப்படுமுன்னர் எக்கட்டத்திலும் பிரிவு 70அ வின்கீழ் ஆரம்ப நீதிமன்ற நீதிபதியினால் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையைப் புறத் தொதுக்கலாம், வேறுபடுத்தலாம், மாற்றலாம் அல்லது திருத்தலாம்.

(5) அத்தகைய வழக்குநடவடிக்கைகளில் எழுகின்ற ஏதேனும் விடயத்துக்காக இச்சட்டம் ஏற்பாடுசெய்யாதவிடத்து, அதேபோன்றவொரு விடயத்தை ஆளுகின்ற (101 ஆம் அத்தியாய மான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவையின் ஏற்பாடுகள், வழக்கின் நீதி தேவைப்படுத்தக்கூடியவாறாகப் பொருத்தமான இசைவாக்கத்துடன் கடைப்பிடிக்கப்படுதலும் பயன்படுத்தப்படுதலும் வேண்டும்.".

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.